# ஆத்ம ஜோதி



தவத்திரு யோகர் சுவாமிகள்



# ஆத்ம ஜோதி

[ஓர் ஆத்மீக மாத வெளியீடு]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

- சுத்தானந்தர்

ஜோதி 17 குரோதி ௵ பங்குனி ௴ 1உ [14-3-65] சுடர் 5

## பொருளடக்கம்


1 என் குருபர புங்கவ சிங்கமே! 129
2 பாரிடை எம்மை ஆண்டாய்! 130
3 மறைந்தும் மறையாதவர்! 131
4 ஸ்ரீயோகர் சுவாமி அர்ச்சனைமாலை 133
5 ஆத்மீக வாழ்வின் மறுமலர்ச்சி 136
6 யோகர் சுவாமிகள் ஒரு சிறந்த ஜீவன் முக்தர் 138
7 உலகின் கதிரொளி 139
8 பேரின்பமுறுவ தெந்நாள்? 143
9 யோக சுவாமிகளுடன் கொழும்பில் இரு நாட்கள் 144
10 ஈழத்துத் தவப்பெரியார் யோக சுவாமிகள் 148
11 மரணமே வருக! 156
12 தனி முதல் 158
13 உலக சமயங்கள் மூலம் உலக ஒற்றுமை 160



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூபா 75. வருட சந்தா ரூபா 3.00
தனிப்பிரதி — சதம் 30
கௌரவ ஆசிரியர் — திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் — திரு. நா. முத்தையா
"ஆத்மஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. [சிலோன்]
தொலைபேசி எண் 353


# என் குருபர புங்கவ சிங்கமே

(யோகர் சுவாமிகள்)

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
தானா யெங்குஞ் செறித்திட வேண்டுமே
பொன்னை மாதரைப் போக்கிட வேண்டுமே
புவியி னாசையை நீக்கிட வேண்டுமே
கண்ணைப் போலறங் காத்திட வேண்டுமே
கமல பாதந் தொழுதிட வேண்டுமே
எண்ணம் யாவு மிறந்திட வேண்டுமே
என்கு ருபர! புங்கவ சிங்கமே!

கசடு தீர்த்தறங் கற்றிட வேண்டுமே
கல்வி யாற்பயன் பெற்றிட வேண்டுமே
அசடர் நட்பை அகற்றிட வேண்டுமே
அந்தி சந்தி அடிதொழ வேண்டுமே
நிசசொ ரூபம றிந்திட வேண்டுமே
நீங்கா தென்று மிருந்திட வேண்டுமே
அசலு னக்கிலை யென்ற குருபர!
ஆண்மை விஞ்சிடும் அற்புதச் சிங்கமே!

மூன்று மொன்றாய் முடிந்திட வேண்டுமே
முனையின் வாசல் திறந்திட வேண்டுமே
ஊன்று பாதத் துறங்கிட வேண்டுமே
உள்ளே ஆனந்தம் பொங்கிட வேண்டுமே
தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே
தூய நிற்குண அற்புத பொற்பதம்
ஈண்டு தந்த இனிய குருபர!
என்னை யாண்டவ இங்கித சிங்கமே!

# பாரிடை எம்மை ஆண்டாய்

(முத்து)

பஞ்சுபோல் தலையின் தோற்றம்
பார்வையால் இழுக்கும் காந்தம்
அஞ்சியே செல்வார் தம்மை
அணைத்தரு கிருத்தும் பாங்கு
தஞ்சமென் றடைந்த வர்க்குத்
தண்ணருள் பொழியும் வள்ளால்
நெஞ்சமே நினைந்து நின்னை
நினைப்பறப் போயிற் றைய!

குருவெனச் சொல்லிக் காலில்
கும்பிட்டு விழுவார் தமக்கு
அருமறை கூறும் வாக்கை
அலாதியாய்க் கூறிப் பேசி
குருஉரு அல்லன் யானும்
குறைந்தவன் நீயும் அல்லை;
இருவரும் சமமே என்று
இன்னுரை பயந்தாய் போற்றி!

முழுவதும் உண்மை என்று
முனிமொழி தன்னால் பேசி
அழுவதும் உண்டேல் நீங்கள்
ஆண்டவன் அருளுக் கழுங்கள்
ஒழுகுவ துங்கள் கடமை
ஒன்றையே உன்னும் என்று
பழுதிலா அறங்கள் தந்து
பாரிடை எம்மை ஆண்டாய்!



# மறைந்தும் மறையாதவர்

(ஆசிரியர்)

யோகர்சுவாமிகள் உடல் கொண்டு உலாவிய காலத்தில் சுவாமிகளைக் கேள்விப்பட்டவர்க்ள் ஒரு சிலரே. அத்தகைய ஒருசிலருள் மிகச் சிலரே சுவாமிகளுடைய தரிசனத்தை நாடி ஓடினர். அங்ஙனம் ஓடிய ஒருசிலருள் மிகமிகச் சிலரே சுவாமிகளுடைய திருவடியை அண்டினர். அங்ஙனம் அண்டியவருள் ஒருசிலரே சுவாமிகளை அறிந்தனர். அறிந்தவருள் ஒருசிலரே உணர்ந்தனர். உணர்ந்தவருள் ஒருசிலரே சுவாமிகள்காட்டிய வழியிலே வாழ்ந்துதாமும் வழிகாட்டிகளாக இருக்கின்றனர். இத்தகையவர்களைக் கைவிரல் விட்டு எண்ணிவிடலாம்.

சுவாமிகளுடைய பூதஉடல் மறைந்து ஒருஆண்டு ஆகின்றது. இந்த ஓராண்டுகாலத்துக்குள்ளே சுவாமிகளை அறிந்து உணர்ந்தவர் முன்னையிலும் அதிகம் என்றே கூறலாம். சுவாமிகள் பூதஉடல் கொண்டு உலாவியகாலத்தில் சுவாமிகளுடைய தரிசனமே கிடைக்கப்பெறாத எத்தனையோபேர் சுவாமிகளிடம் கனவிலேதாம் உபதேசம் பெற்றதாகச் சொல்வதைக் கேட்கும்போது சுவாமிகளுடைய ஆத்மசக்தி இப்போதான் நன்குதொழிற் படுகின்றது என உணரக்கிடக்கின்றது.

சில மகான்களின் ஆத்மசக்தி அவர்களுடைய மகாசமாதிக்குப் பின்புதான் பன்மடங்காகத் தொழிற்படுகின்றது. வடஇந்தியாவில் வச்ரேஸ்வரி என்ற இடத்திலிருந்த சுவாமி நித்தியானந்தர் இவ்விதம் சித்திகள் செய்திருக்கிறார். அவரது சீடனை யாராவது பராதீனமாய் நடத்தினால் அவருக்குப் பின்னால் நிழல்போல் தமது உருவத்தைக் காட்டுகிறாராம். சுவாமி முக்தானந்தரே அந்தச்சீடரும் ஆச்சிரமத்துத் தற்போதைய தலைவருமாவார். இதேபோன்றுதான் யோகர் சுவாமிகளும் பலருக்குக் கனவில் தோன்றி உபதேசங்கள் அருளுகின்றார். சுவாமிகள் முன்னர் உடல் கொண்டுலாவியபோது இப்படிச் செய்யவில்லை.

யோகர் சுவாமிகளைப் பற்றிய அர்ச்சனை மாலை ஒன்று இக்கட்டுரையைத் தொடர்ந்து வருகிறது. அதற்கு அடிஎடுத்துக்கொடுத்து திருத்தமுஞ் செய்து பூரணப்படுத்தியவர் சுவாமிகள் என்றால் சாமானிய மக்கள் நம்பமாட்டார்கள். அவர்களை நம்பச் செய்ய யாராலும் முடியாது. நம்பாதார் நம்பாதாரே. அந்த அநுபவம் அவரவருக்கு ஏற்படும் போது தான் அதனை உணரமுடியும். சாத்திர அறிவு வேறு; சாதனையில் கண்ட அநுபவம் வேறு.

அர்ச்சனை மாலைபாடிய அன்பர் பாடிமுடித்துவிட்டு படுக்கைக்குச் சென்றார். சுவாமிகள் கனவிலே தோன்றி எல்லாம் நல்லாக அமைத்துவிட்டாய். என் பொல்லாக்குணத்தை ஏன் விட்டுவிட்டாய்? என்று கேட்டார்களாம். அதன் பின்பே

"ஆத்திரத் தோடேசித் திருத்துவாய் போற்றி" என்ற அடியைச் சேர்த்துக் கொண்டார்.

பூதஉடல் மறைந்து விட்டால் மறைந்ததாகக் கொள்வதே எம்மனோர் மனோநிலை. கண்டத்துள் இருந்த ஆத்மசக்தி இப்போ அகண்டமாகிவிட்டது. முன்புயோகர் சுவாமிகளைப் பார்க்க விரும்புவோர் விடியுமுன் கொழும்புத்துறை நோக்கி ஓடுவர். எட்டுமணிக்கு மேலாகிவிட்டால் சிலகாலம் மருதனாமடச்சந்தியிலும் பிற்காலத்தில் வண்ணைச் சிவன்கோவிலடிக்கும் ஓடினர். இப்பொழுதோ சுவாமிகளை எங்கும் தரிசிக்கலாம்.

தரிசிக்கவேண்டும் என்ற அவா எழவேண்டும். ஆர்வம் கொழுந்துவிட்டு எரிந்தால் சுவாமிகளே ஓடிவருவார்கள். எமக்கு அப்படித் தரிசனைகிடைக்கவில்லையே என்று கருதினால் எமக்கு அவரைத்தரிசிக்கும் ஆர்வம் இல்லை என்பதே தெளிவு.

"என்னைநீ வேறாயெண்ணி இடர்ப்பட வேண்டாமென்று
தன்னைத்தந் தாண்டுகொண்ட சற்குரு தாள்கள் வாழ்க"

இதனை என்றும் சிந்திப்போம். அச்சிந்தனைமயமாவோம். இந்த ஓராண்டு காலத்திலே யாமெல்லாரும் பெற்ற அநுபவங்களே போதிய சான்றாயுள்ளன.



# ஸ்ரீ யோகர் சுவாமி அர்ச்சனை மாலை

சிவனொளி பரவும் சீர்மிகு இலங்கையில்
பவவினை தீர்க்கும் பரம வைத்தியர்
பார்ப்பதற் கிலையெனும் பெருங்குறை தீர,
மைசூர் விட்டு இவ்வூர் வந்த
கடையிற் சாமியாங் கடவுட் பித்தனார்
நடையிற் காட்டி நாட்டில் பரப்பிய
பிரம்ம ஞானப் பெருநிதி யதனை,
அருமைத் துறவி அற்புத சித்தன்
நல்லூர்க்கந்தன் நற்கருணை பெற்றோன்
செல்லப்பசாமி சேமித்து வைக்க,
வள்ளல்போ லதனை வாரி வழங்க
மாவையம் பதியில் மாண்புற வாழ்ந்த
அம்பல வாணர் அருந்தவத் துதித்த
ஒருதனி மகனாம் உத்தம போற்றி!
சின்னாச்சி யம்மையார் சீருடன் பெற்ற
செல்வனே! எங்கள் சிவனே! போற்றி!
சின்ன வயசில் அன்னையை இழந்து
மாமியார் அன்பில் வளர்ந்தனை போற்றி!
மகா யோகியென்று மன்னுல கேத்தும்
அரவிந்தர் தோன்றிய ஆங்கிரச ஆண்டில்
வைகாசித் திங்கள் புதன் வாரத்தில்
இடப லக்கினமும் அவிட்ட நட்சத்திரமும்
உடன் பொருந்திய உத்தம வேளையில்
யோக நாதனாய் அவதரித்தனை போற்றி!
பெற்றோர் வைத்தஇப் பெருமைதரும் பெயர்
பின்னாள் வாழ்வுடன் பிணைந்திட்ட பெற்றி
என்றென் றைக்குமோர் அதிசயம் ஐயா!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் பொருள்
வாக்கும் மனமும் வடிவமுந் தாங்கி
காக்குமெங் காவலனாய்க் காட்சி நல்கி
தொண்ணூற் றோராண்டு மண்மீ துலாவி
கற்றோர் தமக்கும் கல்லாத வர்க்கும்
பற்றற் றவர்க்கும் பற்றுடை யோர்க்கும்
துன்பந் துடைத்துத் துயரை விலக்கி
இன்ப நிலையருள் இறையே போற்றி!
இல்லற ஞானியாம் செல்லாச்சி யம்மையின்
சொல்லரும் மகிமை துலக்கினை போற்றி

செல்லப்ப சாமி சொல்லிய படியே
நல்லூர்த் தேரடி வாழ்வை விடுத்து
கொழும்புத் துறையேகுடி யானாய் போற்றி!
இருப்ப மரத்தடி விருப்புக் கொண்டு
இருந்த படியமர்ந் திருந்தாய் போற்றி!
கல்லா லின்கீழ் இருந்ததொல் காட்சியிங்
கெல்லாருங் காண இசைந்தனே போற்றி!
சிவதொண்ட னெனும் சீரிய இதழை
பவவரு டத்து மார்கழித் திங்களில்
எவரு முவப்ப நிறுவினை போற்றி!
நற்சிந் தனையெனும் அற்புத நூலால்
பெற்ற பிறவியின் பேறினை அடைய
நற்கதி யெமக்கு நல்கினை போற்றி!
நால்வர் பாடலின் நயங்க ளனைத்தையும்
கருத் திழக்காது காலத்திற் கேற்பத்
திருத்தி யமைத்த தேசிக போற்றி!
சங்கரர் போற்றிய சன்மார்க் கத்தை
இங்குளா ர் பலர் பிழையாய் விளங்கி
வேதாந்த சித்தாந்த வேற்றுமை பேசி
வீண்வா தஞ்செய் விற்பன ராயினர்;
அன்னார் தமக்கு அத்வைத நெறியின்
உண்மையை விளக்கி ஒற்றுமை நாட்டிய
தாய்நா டதனில் தாயுமா னவர்போல்
சேய்நா ட்டில் ச்சேவை செய்தனை போற்றி!
புத்தரும் திருமூல சித்தரும் போலவே

''தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே''

எனும்பழம் பேருண்மை உணர்த்தினை போற்றி!

''உன்னை யறிந்திடில் உனக்கொரு குறையிலை
பின்னே பிறரிடம் பெறுவதற் கொன் றிலை;
உன்னுள் இருக்கும் ஒருதனிக் கடவுளே
என்னுள் உள்ளான் எங்கும் உள்ளான்
காலையும் மாலையும் கடவுளை வணங்கி
இயற்கையோ டியைந்த இல்லற நெறியில்



நல்லறம் பேணி நல்லாய் வாழுங்கள்;
சாமியா ராகும் ஆசையை விடுமின்
என்னையுஞ் சாமி ஆக்கா தீர்கள்.''

இவைபோல் பற்பல இன்னுரை கூறி
நவைதீர் வாழ்க்கை நவின்றனை போற்றி!
வேதங்கள் கூறும் மகாவாக் கியங்களும்
'ஒரு பொல்லாப்பில்லை நாமொன்று மறியோம்'
எனவரும் குருவின் திருவாக் கியங்களும்
ஒரேகருத் துடையன வெனும்பே ருண்மையை,

''சுவாமி யோகநாதன் சொல்லிய பாட்டு
சுந்தர மான வழிதனைக் காட்டும்
ஆவியுள் ளளவும் அமுதத்தை யூட்டும்
அகம் பிரமாஸ்மி யெனமுடி சூட்டும்'' என்

றருமையாய் விளக்கி யருளினை போற்றி!
பெரும்பாலும் மக்கள் கடும் பைத்தியமென
எள்ளி நகைசெய்த செல்லப்பர் தன்னை
சிவமாய்க் கண்டு சிவமாய்ப் போற்றிச்
சென்னியி லவர்பதம் சிரத்தையோ டேந்திக்
குருபக்திக் கிணையில் குன்றே போற்றி!
குலார்ணவ தந்திரம் கூறுங் குருபக்திக்
குலகில் உதாரணம் ஆனாய் போற்றி!

''என்னை யறிவித் தெனக்கருள் செய்தவன்
என்னிலும் வேறலன் அன்னே யென்னும்
என்னிலும் வேறலன் எல்லாம் வல்லவன்
மண்ணினில் வந்தவன் அன்னே யென்னும்''

என்று குருவின் தெய்வத் தன்மையும்
குருவும் சீடனும் ஒன்றெனும் உண்மையும்
நன்று விளக்கிய நம்பனே போற்றி!

''தன்னைப் பாரில்லாத் தலைவன் பெருமையை
என்னால் எழுதிக் காட்ட முடியுமோ?''

என்று சோல்வெரிப் பிரபுவின் மைந்தன்
சாந்தன் போற்றும் சற்குரு போற்றி!
சோபகிருது பங்குனி மாதத்தில்

சுக்கில பட்ச ஏகாதசித் திதி
ஆயிலியத் துடன் அணைந்திடும் வேளையில்
ஓயாச் சேவையால் இளைத்த உடலை
நீத்து நிர்வாணம் அடைந்தனை போற்றி!
வேதாந்த சித்தாந்த சமரசங் கண்ட
வித்தகச் சித்தர் கணத்தைச் சேர்ந்த
சுத்தனே அளப்பருஞ் சோதியே போற்றி!
அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி!
தன்னிக ரில்லாத் தற்பரா போற்றி!
அன்புட னணைத்து அருள்வாய் போற்றி!
ஆத்திரத் தோடேசித் திருத்துவாய் போற்றி!
இக பர சுகங்களை ஈவாய் போற்றி!
கண்ணே போற்றி! கருத்தே போற்றி!
விண்ணே போற்றி! மணியே போற்றி!
விமலா போற்றி! விநாயகா போற்றி!
யோகா போற்றி! தியாகா போற்றி!
கோவே போற்றி! குருவே போற்றி!
தேவே போற்றி! திருவே போற்றி!
போற்றி! போற்றி! நின்பொன்னடி போற்றி!
போற்றி! புங்கவ! நின் பொன்னருள் போற்றி!

—க. இராமச்சந்திரன்.

---

# ஆத்மீக வாழ்வின் மறுமலர்ச்சி

(முஹம்மது காசீம் — மதார் நாச்சியா)

உனது முக்தியின் உயர்வு மாண்புற வேண்டுமானால் இறை தியானத்திலேயே சதா ஈடுபடு. கண்முன் தெரியும் பௌதீக உலகத்தின் மயக்கங்களுக்கு மதிப்புக் கொடுக்காது அகண்டத்தின் பரவெளியிலே ஆனந்தம் பெறு. அதுவே அருள் நாட்டம் பெற, இறை நேசம் காண இனிமை நிறைந்த அமைதி வழி.

காலத்தினால் அழிந்து விடும் ரூபங்களின் கவர்ச்சிகளினின்றும் முற்றிலும் விடுதலை பெற சிறந்த மார்க்கம் அரூபத்திற்கும் அப்பாலுள்ள பூரண முழுப் பொருளுடன்



ஒன்றுபடுவதேயாகும். தியாகத்தின் உச்ச நிலை 'நான்' என்ற அகந்தையை அடியோடு அழித்து விட்டு ஆனந்த மயமான அத்வைத நிலையில் ஐக்கியமாவதேயாகும். தூங்காது தூங்கி சுகம் பெறும் நிலை சும்மாயிருக்கும் இடம். அது அறிவு கெட்ட நிலையுமல்ல, அஞ்ஞானத்தின் உறக்கமுமல்ல. ஆனால் யோகக் கலையில் தெளிவு பெற்று உணர்வு மயமாக விளங்கிடும் உன்னத நிலை.

தியான சக்தியை நம்பு. ஆழ்ந்த தியானத்தின் வலிமையால் சேகரித்த புனித சக்தியின் துணையால் துவங்கப்படும் உனது ஆத்மீக வாழ்வை இந்த உலகில் எந்த சக்தியாலும் குலைத்து விட முடியாது. அருள் நிறைந்த ஆனந்தத்தின் ஜீவ நதி உனது ஆத்மீக வாழ்விலேதான் அடங்கி இருக்கிறது.

உனது வாழ்வின் உயிர்நாடி உன் கையில் தானிருக்கிறது. உனது நல்லொழுக்க தூய வாழ்வில் உறுதியாக நில். உனது வாழ்வு உண்மையில் புனிதமடையும். உனது ஆத்மீகச் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. உனது வசீகர சக்தியை அழிப்பதற்கு யாராலும் இயலாது. பண்பட்ட பரிசுத்த ஆத்மீக வாழ்வில்தான் இன்பமும் இதய சாந்தியும் இருக்கிறது. உனது வாழ்வு உயர்தர ஆத்மீக சக்தியில் பிணைந்திருக்கும் வரையில் உனது பரந்த-தெளிவான லட்சியத்தை யாராலும் களங்கப்படுத்த முடியாது.

உனது ஆத்மீக வாழ்வு முக்கியம். கீழ்த்தர உணர்ச்சியால் கவ்வப்பட்டு சுய உணர்வற்ற கீழான மட்டரக மக்கள் உனது ஆத்மீக வாழ்வின் மகிமையை அறியும் ஆற்றலற்றவர்கள். சுழலும் விகார உணர்ச்சியினால் கட்டுண்ட மக்களது எண்ணங்களை உன்னால் ஒருநாளும் திருப்தி செய்ய முடியாது. ஆகவே பரிசுத்த இயக்கத்திற்குத்தடையாக இருக்கும் எல்லாவித சூழ்நிலைகளையும் கடந்து நிற்கப் பழகிக் கொள்.

உனது சுதந்திரம் நிறைந்த ஆத்மீக வாழ்வு கீழான இச்சைகளில் மயங்கிடும், மக்களைத் தட்டியெழுப்பிடும் அமைதியான ஆத்மீகப்புரட்சி.

யோக வாழ்வு புனிதம் நிறைந்த வற்றாத இன்ப ஊற்று. அருள் நிறைந்த அழகும், ஆனந்தம் கலந்த அமைதியும் எப்பொழுது உனது யோக வாழ்வில் வளர்ந்தோங்குகிறதோ அன்றுதான், அங்கேதான் ஆத்மீக வாழ்வின் மறுமலர்ச்சி எழில் பெறுகிறது.

# யோகர் சுவாமிகள் ஒரு சிறந்த சீவன் முத்தர்

(தவத்திரு. வடிவேல் சுவாமிகள்)

உலகிலுள்ள பெரியார்கள் உலக மக்கள் உய்யும் பொருட்டே அவதரிக்கின்றார்கள். அவர்களின் தோற்றத்தால் உலகம் புனிதமடைகின்றது. உலக மக்கள் பரிசுத்த மடைகிறார்கள். அவ் வழிகாட்டிகளாகிய பெரியோர்கள் சீவன் முத்தர்களென்றும், திட ஞானிக ளென்றும் மகா ஞானிக ளென்றும் வித்துவா னென்றும் பண்டிதரென் றும் போற்றப்படுகின்றனர்.

இவர்கள் இந்நிலை அடைவதற்குச் சென்மாந்திரப் புண்ணியங்களே அடிப்படைக் காரணம். அதைவிட அவர்களது நிலை, நிலவயத்தினால் அடைவதென்றும் வினைவயத்தினால் அடைவதென்றும் இரண்டு சென்மங்கள் அவர்களுக்கு உள வாகின்றன. இந்தச் சென்மத்தில் யோகர் சுவாமி அவர் களுக்கு அமைந்த செல்வம் வினைவயத்தால் எய்தியதாகும். அது எப்படி யென்றால் தன் பிறப்பிலேயே சிறிது காலம் உடற்குரிய கன்மங்களைச் செய்து வந்தார். சிறிது காலத்தில் திருவருளின் அற்புதத்தினால் தன்னுடைய தொழில்கள் அனைத்தையும் விட்டு நீங்கக் கூடிய ஒரு நல்ல வினையைத் தொடங்கிக் கொண்டார்.

ஈசுர பக்தி கொண்டார். தான் யார், கடவுள் யார், என்று ஆராயத் தொடங்கினார். தன்னை மறைக்கும் பந்தம் எது பந்தத்தி லிருந்து விடுபடும் வழி எது என்று ஆராயத் தொடங்கினார். அந்த ஆராய்விலிருந்து இவற்றிற்கெல்லாம் ஆசைகளே மூல காரணம், என உணர்ந்து மனத்தை எப்படி வெல்லுவது என்றும் ஆராயத் தொடங்கினார்.

அவருக்கு ஈசுவரனே புது வடிவாகத் தோற்றினார். அந்தக் குருவினுடைய பாதத்திற்கே தன்னை அர்ப்பணித்தார். அக் குருவின் பூரண உபதேசத்தினாலே உலகிலே உள்ள எல்லா விடயங்களிலும் விளங்கினார். தமது ஆத்ம நித்தியத்தைக் குரு கருணையினாலே கண்டார். அதனால் உலகிலே தாமரை இலைத் தண்ணீர் போன்று பற்றற்று வாழ்ந்தார். இதனாலும் யோகர் சுவாமி அவர்கள் சீவன் முத்தராக விளங்கினார்.



தன் உடல் நீங்கும் வரை தன் குருநாதனுடைய சேவையை முக்கிய பணியாகக் கொண்டார். விழிப்பதும் நினைப்பதும் பேசுவதும் குரு பாத சக்தியே யாகும். அதனால் அவர் சீவன் முத்தராகவும் இலங்கையிலே திகழ்ந்தார்.

எல்லா மதத்தினரும் தலை தாழ்த்திப் போற்றக்கூடிய சமரச சுபாவ நிலையைப் பெற்று வாழ்ந்தார். இதனால் இலங்கையின் ஒளி விளக்கானார். இன்னும் அவரது புகழ் உலகெங்கும் ஒளி விளக்காக இருப்பதாக.

ஓம் தத் சத் சாந்தி.

---

# உலகின் கதிரொளி

(விசாலாட்சி — மகாதேவா ஆச்சிரமம்)

உலகின் கதிரொளி யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை. உலகின் சிகரம் அன்னாரின் புகழ். சான்றோரின் வாழ்க்கைக்கு சுவாமிகளின் வாழ்க்கை எடுத்துக்காட்டும் வழிகாட்டியுமாகும்

''வாய்மை நிலை பெறுவதினால் யோகியானவன் தனக்கும் பிறர்க்கும் கருமமின்றியேகருமபலனைப் பெறுகின்றான்''

என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தவர் யோகர் சுவாமிகள். அவர்கள் ஒருவரிடமும் பகை கொள்வதில்லை. அனைவரிடத்தும் நட்புப் பூண்டு இரங்கும் சுபாவம் உடையவர். சுவாமிகளுக்கு யான், எனது என்ற அகங்காரம் வந்ததேயில்லை. தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்தார். இன்ப துன்பம் இரண்டையும் ஒருசமனாகவே பாவித்தார். எப்பொழுதும் முழுமனதுடன் யோகத்தில் இருப்பார். அதனாற் சித்த வலிமை பெற்றார். மனத்தையும் புத்தியையும் தன் குருவிற்களித்தார். தன்குரு

வின் அன்பு நிறைந்த பக்தரானார். உவகை வெகுளி அச்சம் ஆத்திரம் கொள்ளாது தனக்கும் பிறர்க்கும் இனியவராய்த் திகழ்ந்தார். அவரிடம் பரிசுத்தம் மிகுந்திருந்தது. சுறு சுறுப்புடன் காணப்பட்டார். நன்மையிலும் தீமையிலும் புகழினும் இகழினும் மனத்தைச் செல்ல விடாது எல்லாம் ஒன்றென்றே இருந்தார். தனக்கென ஒரு மனையில்லாது அனைத்துலகையும் தன் மனையாகக் கொண்டார்.

### சுவாமிகளின் பிரிவும் உலகிற்குக் கேடும்

இறைவன் முன் தோன்றும் இவ்வுலகு ஓர் கற்பனை. கயிற்றின் அரவு போன்றது. சிப்பியின் வெள்ளி போன்றது. கானலின் நீர்போன்றது. இதனை நிலை நாட்டவே இறைவனால் முனிவர்கள் ஞானிகள் சித்தர்கள் யோகிகள் ஆகிய அவதார புருடர்கள் உலகிற்கு அனுப்பப்படுகின்றனர். அத்தகையோரில் செயற்கரிய செயல் ஆற்றியவர்களுள் யோகர் சுவாமிகள் உச்ச நிலையை அடைந்தவர்கள். அன்னாரின் ஆற்றற்கரிய ஆற்றல்களை எம் மதமும் சம்மதமாய் ஏற்று அன்னாரை வழிபட்டனர்.

வேண்டுதலும் வேண்டாமையும் இலராகிய ஈழத்தின் சோதி மணியாகிய யோகரின் மறைவும் அன்னாரின் உடல் எரியுண்டமையும் உலகத்திற்கும் சைவப் பெரும் மக்களுக்கும் பெருங் கேட்டையே தந்து வருகின்றது. அன்னார் பிரிந்த அதே வருடத்திற்குள் உலகமானது அல்லலற்பட்டு ஆற்றாது வருந்துகின்றது. சுவாமிகளின் திருவுடலை ஓர் குகையின் கண் வைத்துத் தலையிற்றேங்காய் முடிவைத்துப் பூமாலை புனைந்தேத்தி வழிபட்டால் என்றும் மீளாப் பேரின்பத்தினை இவ்வுலகு அடையும் என்பதிற் சந்தேகமே இல்லை யென்று கூறலாம். மெய்ஞ்ஞானம் விளக்க வந்த சுவாமிகளின் உடலை எரிக்கக் கூடாது என்பதை வழி வழி வரும் ஞான நூல்களே

"பிறிவிலாத பிரமபி சனுட
லிறுதியாவனற் றீண்டிட லெங்கணு
மறுகி விற்கிடை கோடியனதாய்ச்
செறுவு செய்யுமத் தேசமென்றேதினர்"

என்றும்



"முன்னமே பாகமா மூரல் செய்யுநாட்
பின்னது வேவவேண் டிடுமோ பேசிடா
யன்னதே யிவ்வுட லறிவா லட்டது
பின்னினிச் சுடுவது பிழையே யாகுமால்"

என்றும் கூறுகின்றன.

### சுவாமிகளால் யாம் பெற்ற பயன்

அஞ்ஞான இருளிற் சிக்குண்டோம். ஆணவத்தால் மறைப்புண்டோம். முக்குணத்தாற் பீடிக்கப்பட்டோம். பிறவிப் பெருங் கடலுள் ஆழ்ந்தோம். ஆசை யென்னும் கள்ளைக் குடித்தோம். பிறரின் செல்வம் புகழ் ஆதியன கண்டு பொறாமை யென்னும் தேளாற் கொட்டப்பட்டோம். தற்பெருமை என்னும் பிசாசால் பிடிபட்டு அல்லற்படும் எம் மனதை அடக்கச் சிறந்ததோர் குருவாக, ஞான விளக்காகத் தெப்பமாக நம் வாழ்வில் வந்தார். நான் வேறு, ஆத்மா வேறு, உடலன்று நீ, ஒரு பொல்லாப்பும் இல்லை, எப்பவோ முடிந்த காரியம் என்ற உபதேசங்களை ஈந்தார். எம்மை ஈர்த்து ஈர்த்து இறைவனின் பொற்கழல் காட்டினார். அன்னார் எமது ஆத்ம ஈடேற்றத்திற்காகக் காட்டிய செந்நெறிகள் யாவும் எழுதச் சொற்கள் போதா. எழுதி விட்டால் அவற்றிற் பொருள்கள் அடங்கா. சொல்லுக்கும் பொருளுக்கும் ஓவியத்திற்கு மடங்காத சுவாமிகளைப் போற்றிய மெய்யன்பர்கள்

"பலன்கள் வேண்டிய பரிசெலாம் பலித்திடும் பரமதத்துவ ஞானி
நலங்கொளு மமா மந்திரஞ் செபித்திட நயந்தவ னீராடுஞ்
சலங்கொடீர்த்தமா மவன்றிரு மேனியே சகல தெய்வமுஞ் செவ்வாய்
மலர்ந்த வாசக மறுபிறப்பென வருமயற்பிணிமருந்தாகும்"

ஆகிய பாடலிற் கூறப்பட்ட பயன்களையே அடைந்தனரெனக் கூறலாம்.

**நற்சிந்தனை ஓர் கண்ணாடி, சச்சிதானந்தக் கடல், ஆய்வு நூல்**

தனக்குவமை இல்லாத சுவாமிகள் தீநெறிச் சென்று தீமை செய்து ஆண்டவனை மறக்கும் மக்களுக்கும், நன்

நெறி காண விழையும் மக்களுக்கும் வழிகாட்டியாக அரிய மருந்தாக நற்சிந்தனை என்னும் நூலை விட்டுச் சென்றனர். யாம் செய்த மாதவத்தால், ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்ற பொன் மொழியைப் போற் றும் சுவாமிகள் இச் சிறு நூலை விட்டுச் சென்றனர். எக் காலமும் யாவராலும் காண முடியாத அப் பெருந்தகை யாளரை நற்சிந்தனை யென்னும் கண்ணாடிக்குள்ளே காண லாம்.

செய்கைக் கண்ணாடி தன்னையும் பார்ப்பவரையும் மாத் திரமே காட்டும். நற்சிந்தனைக் கண்ணாடி அப்படி யன்று. தன்னைக் காட்டும். பார்ப்போரைக் காட்டும். யோகர் சுவாமியைக் காட்டும். பிறரைக் காட்டும். பரமனைக் காட்டும். அத்தகைய நூல் சச்சிதானந்தக் கடலென்றால் மிகையாகாது. அதனுள் செல்லச் செல்ல உள்ளம் உரு கிப் பாகாகும். என்றும் தெவிட்டாத சுவையைத் தரு கின்றது. இந் நூலுள் இல்லாத பொருளே இல்லை என லாம். விரல்விட்டு எண்ண முடியாத நூல்கள் அத்தனை யையும் தன்னகத்தே அடக்கி ஓர் ஆய்வுக் களஞ்சியமாக விளங்குகின்றது.

''என்னை எனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்''

என்று தொடங்கும் பாடலின் அடிகளில் இலக்கியச் சுவை, பக்திச் சுவை, வேதாந்தக் கருத்துக்கள் ஆதியன பொதிந்து காணப்படுகின்றன. எனவே நற்சிந்தனை, மனி தனின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாய் தெய்வீக நூலாய் வாழ்க்கை நூலாய் மிளிர்கின்றது. தூண்டாமணிச் சுடரா கிய சுவாமிகள் மனமுவந்தளித்த இந் நூலொன்றிற்கே ஆய்வாளர்கள் நூல்கள் எழுத முயலுகின்றார்கள். எனவே இன்னும் சிலகாலத்தில் இந்நூல் இலக்கணமாக இருக்க இதற்கு இலக்கியமாகப் பற்பல நூல்கள் ஆய்வாளரால் ஆராய்ந்து வெளிவரும் என்பது உண்மை. இந் நூலைத் தந்த சுவாமியவர்கள் அருளினால் உலகின் கதிராகிய இந்நூலைப் பயின்று பரமனடிகளைச் சிக்கெனப் பிடித்துப் பேரானந்த மடைவோமாக.

ஓம் சாந்தி.

# பேரின்பமுறுவ தெந்நாள்?

— பாலபாரதி —

என்னுயிர்க் குயிரே! ஞான
எழில்மணிச் சுடரே! மௌனப்
பொன்னொளிப் பிழம்பே! இன்பப்
புத்தமுதூற்றே! தூயர்
எண்ணத்துள் இனிக்கும், ஞான
இன்சுவைக் கனியே! உன்றன்
வண்ணப் பொற்பதத்தை, நாயேன்
வழுத்திடப் பெறுவதெந் நாள்?

பக்தர்தம் இதயத் துள்ளே
படரொளி பரப்பி, இன்பம்
தித்திக்கச் சுவையளிக்கும்
தேனே! செங்கனியே இந்தப்
பித்தனேன் உன்றன்பாதப்
பேரின்ப நிழலைத்துய்த்து
சுத்த மெய்ஞ் ஞான வாழ்வைச்
சுவைத்திடும் நாளெந் நாளோ?

கற்றவர் இதயந் தோறும்
களிப்பினையருளும், தூய
பொற்சுவைக் குன்றே! வேதப்
பூரணப் பொருளே! ஞானம்
அற்ற புன் சிறியேன், உன்றன்
அடிதொழும் அடியார், நேயம்
பெற்றுய்வ தெந்நாள்? நாயேன்
பேரின்ப முறுவ தெந்நாள்?

எண்ணெழுத் தறியாப் பேயேன்,
இறைவ! நின்புகழைப்பாடும்,
வண்ணம் ஒன்றறியேன்; தூய
வார்த்தை நன் கறியேன்! என்றன்
புன் இசைக் கவியில் அன்புப்
புனிதத் தேன் பொழிந்து, இன்பப்
பண்ணிசையாகப் பொங்கிப்
பாரெலாம் இசைப்ப தெந்நாள்?

# யோக சுவாமிகளுடன் கொழும்பில் இரு நாட்கள்

(ச. அம்பிகைபாகன்)

யோக சுவாமிகள் தமது குருவின் மேற்பார்வையில் நல்லூர்த் தேர் முட்டியில் நாற்பது நாட்கள் கடுந்தவம் புரிந்தபின்னர் பரிவிராஜகவாழ்க்கையில் ஈடுபட்டு கால்நடையில் கதிர்காமம் வரைசென்று திரும்பியதை அன்பர்கள் அறிந்திருக்கக் கூடும். இந்நிகழ்ச்சி 1913 ம் ஆண்டில் நிகழ்ந்ததென்பர். இதன் பின்னர் பதினைந்து ஆண்டுகள் சுவாமிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டைவிட்டு வெளியே செல்லவில்லை. அப்படிச் செல்வதற்கு தமக்கு உத்தரவில்லை என்பர்.

பின்னர் 1928 ம் ஆண்டுவரையில் இருந்தாற்போல் இந்தியாவுக்கு யாத்திரை செய்தனர். இதைத்தொடர்ந்து இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்றுவரத் தொடங்கினர். அப்படிச் செல்லும் காலங்களில் அன்பர்கள் இல்லங்களில்தான் தங்குவர். அன்பர்களும் சுவாமிகளின் வசதியைக்கருதி தங்கள் தங்கள் இல்லங்களில் ஒவ்வோர் அறையை அவர்கள்தங்குவதற்கென ஒதுக்கிவைத்திருந்தனர்.

1939 ம் ஆண்டில் யான் ஆசிரிய சங்க அலுவலாக கொழும்புக்குச் சென்றேன். அந்த அலுவல் முடிந்ததும் நான் தங்கியிருந்த இராமகிருஷ்ணமடத்திற்குத் திரும்பியதும் யோகசுவாமிகள் இராஜசிங்க வீதியில் ஒரு வீட்டில் தங்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அங்குசென்றேன். அங்கு அன்பர்கள் புடைசூழ சுவாமிகள் வீற்றிருப்பதைக் கண்டேன். சுவாமிகள் தங்கியிருந்த வீட்டுச் சொந்தக்காரர் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தபடியால் அடுத்த வீட்டிலிருந்த அம்மையார் சுவாமிகளுக்கும் அன்பர்களுக்கும் வேண்டிய உணவு வசதிகளை கவனித்து வந்தார். சுவாமிகளின் மதிய போசனத்திற்காக அந்த அம்மையார் விசேடமாக உணவைத் தயாரித்திருந்தார். உணவருந்தும் நேரம் வந்ததும் சுவாமிகள் அந்த அம்மையாரைப்



பார்த்து ‘பிள்ளை எனக்குக் காலைச்சாப்பாடு இன்னும் செரிக்கவில்லை. ஆகையால் இந்த அன்பர்களுக்கு நீ தயாரித்த உணவைக்கொடு’ என்றார். அம்மையாருக்குப் பெரும் ஏமாற்றம். ஆனால் சுவாமிகள் கூறியது அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்காது. ‘சித்தன் போக்கு சிவன் போக்கு’ என்பதற்கிணங்க அவர்கள் எந்நேரத்தில் எப்படி நடந்துகொள்வார்களென்றுகூறமுடியாது. ஒருமனிதரிலோஒருவழக்கத்திலோ அவர்கள்கட்டுப்பட்டது கிடையாது. இலங்கைஅரசியல் வாழ்வில்அதிஉன்னதபதவிவகித்தவரும்சுவாமிகளின் அன்புக்கும் மதிப்புக்குமுரியவருளே பெரியார் கொண்டு சென்ற உணவையே பலமுறை திருப்பியனுப்பி விட்டார்.

கொழும்பில் அன்று எங்களுடன் உணவருந்திய ஒரு பெரியாரின் ஞாபகம் இன்றும் என் மனத்தில் நிலைத்திருக்கிறது. அவர்தான் காலஞ் சென்ற ‘‘அக்கவுன்ரன்’’ இராசநாயகம். அவர்களின் புனிதத் தன்மை என்னை மிகவும் வசீகரித்தது. ‘‘பூசும் நீறுபோல் உள்ளமும் புனிதமானோர்’’ என்று நாயன்மாரைப் பற்றிச் சேக்கிழார் கூறியது இவர்களுக்கு மிகவும் பொருத்தமாயிருந்தது. சுவாமிகளின் அன்பர் கூட்டத்தில் இராசநாயகம் அவர்களுக்கு இத்தனி மதிப்பிருந்தது.

இப் பெரியார் உணவருந்திய முறையும் என்னை மிகவும் வசீகரித்தது. சைவ உணவு உண்பதிலும் ஒருமுறை, ஒரு ஒழுங்கிருக்கிறதென்பதை அன்றுதான் உணர்ந்தேன். மேல் நாட்டார்; ஒருவர் உணவருந்தும் முறையிலிருந்து அவரது தார தம்மியத்தை அறிகின்றனர். அதுபோலவே சைவ உலகிலும் ஒருவரின் ஆகாரத்தின் தராதரத்தை அவருண்ணும் முறையிலிருந்து அறிகின்றனர். இதனால்தான் போலும் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களை குடும்பத்தாரோடு திருவாவடுதுறை மகாசன்னிதானம் மடத்துக்கு அழைத்த போது ஒரு மாத அவகாசம் கேட்டாராம். தமது குடும்பத்தாருக்கு மடத்தில் எப்படி உணவருந்துவது, எப்படி நடந்து கொள்வதென்பதைப் பழக்குவதற்கே இந்த அவகாசத்தைக் கேட்டாரென்று கூறுவர்.

யோக சுவாமிகளின் பெருமையை முதன் முதல் பகிரங்கமாக வெளியிட்டவரும், கதாப்பிரசங்கம் செய்வதில் தமக்கு ஒப்பாரும் மிக்காரு மில்லாது விளங்கியவருமான சங்கர சுப்பையர் அவர்களைப் பெரிதும் ஆதரித்தவர் இந்த இராசநாயகம் அவர்களே. சங்கரசுப்பையர் திரு. இராச

நாயகம் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்த காலத்தில்தான் அவர்களின் மகள் சிவபாக்கியத்துக்கு தேவாரப் பண்களை முறையாகச் சொல்லிக் கொடுத்தார். யோக சுவாமிகள் இச் சிவபாக்கியம் பாடுவதற்கென்றே சில கீர்த்தனங்களை இயற்றிக் கொடுத்தார். உசேனி இராகத்தில் பாடப்பட்ட பின்வரும் கீர்த்தனத்தில் சிவபாக்கியம்என்னும் பெயரையே வைத்துப் பாடியுள்ளார்.

பல்லவி

தேடிநின் திருவடியே செல்லமென நாடிவந்தேன்
திருவருள் தந்தாளும் தேவா - சற்குருநாதா

அநுபல்லவி

பாடி மகிழும் சிவபாக்கியம் பாரினில் தேட
மூடிய மாய இருள்ஓட அருள் குருவே (தேடி)

சரணம்

அடியேனைக் கைவிடுதல் ஆகுமோ இது தகுமோ
அன்பிலா திருப்பது அடிகளுக் கழகாமோ
அரசே நல்லூரில் லாசான் ஆரறிவா ரென்றுசொன்ன
அருந்தவனே ஒப்பில்லா என்அப்பனே செல்லப்பனே
(தேடி)

இந்த அம்மையார் இந்தக் கீர்த்தனத்தை சுவாமிகள் சன்னிதியில் ஒருமுறை பாடிய பொழுது அங்கிருந்த அன்பர்கள் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியதாம். திருமுறைகளையும் நற்சிந்தனையையும் திறம்படப் பாடக் கூடிய இவர்கள் (சிவபாக்கியம்) அகால மரணமடைந்தது பெரும் நஷ்டமாகும்.

இரவானதும், சுவாமிகளைக் காண வந்த அன்பர்கள் எல்லோரும் வீடு திரும்பினர். இதனால் சுவாமிகளும் நானும்தான் அங்கு தங்கினோம். ஓர் அறையில் எங்கள் இருவருக்கும் கட்டில்கள் போடப்பட்டிருந்தன. கட்டில்களோ 'ஸ்பிரிங்' கட்டில்கள்; அவற்றுக்கேற்ற மெத்தைகளும் விரிப்புக்களும்; இவற்றுக்கு மேலாக இவ்விரண்டு தலையணைகள். இவ்வொழுங்குகளைக் கண்ட சுவாமிகள்



''இன்றிரவு மல்லிகைப் பந்தலின் கீழ்ப் படுத்த கரையாம் பெண்ணின் நிலைதான் எனக்கு'' என்றார். என்று கூறி அந்தக் கரையாம் பெண்ணின் கதையைக் கூறினர். ஓரிரவு ஒரு கரையாம் பெண் ஒரு மல்லிகைப் பந்தலின்கீழ் படுக்க நேர்ந்தது. அந்த மல்லிகை மலர்களின் வாசனையைத் தாங்க முடியாத படியால் அவளால் நித்திரை கொள்ள முடியவில்லை. அவள் மனம் மீன் வாசனையே நாடியது. அதனால் மீன் கடகத்தை எடுத்துப் பக்கத்தில் வைத்தாள். கடக வாசனை மலர் வாசனையை அடக்க முடியவில்லை. பின்னர் அந்தக் கடகத்துக்கு நீரைத் தெளித்தாள். அதனால் மீன் வாசனை பரக்க வீசியது. இதன் பின்னர்தான் அவளால் நித்திரை செய்ய முடிந்ததென்று கூறி அவள் கதையை முடித்தார்.

இக் கதையைக் கூறிய பின் நற்பழக்கங்களை இளம் வயதில் பழகிக் கொள்ள வேண்டும். சிறு வயதில் பழகிய பழக்கங்களை ஞானிகளாலும் மாற்றலரிதென்றும் கூறினர்.

பின்னர் பல அன்பர்களைப் பற்றிப் பேசினோம். பலருடைய குறைவு நிறைவுகளைப் பற்றியும் பேசினோம். இப்படிப் பேசிய பின் ''இவையெல்லாம் லெளகீகம், உண்மையில் ஒருவரைப் பற்றியும் குறை கூற நமக்குரிமையில்லை. ஒவ்வொரு மனிதனும் தனது தனது வினைப்பயனுக்கேற்றபடி வாழ்கிறான். நாம் எல்லாரிடத்தும் சிவனையும், சிவனிடத்து எல்லாரையும் காணப் பழக வேண்டும்'' என்று கூறினர் இக் கருத்தையே நற்சிந்தனையில் பலவிடங்களில் கூறியிருக்கிறார். அவற்றுள் இரண்டடி பின்வருமாறு.

எல்லாரையு மீசனிடத்திலே காட்டிடா
எல்லாரிடத்திலும் ஈசனைக் காட்டிடா

இதே கருத்தைத்தான் ஈசாவாசிய உபநிடதத்திலும் காண்கிறோம். ''எவன் இருப்புள்ள அனைத்தையும் ஆத்மாவிடத்திலே பார்க்கிறானோ, இருப்புள்ள அனைத்திடத்தும் ஆத்மாவைப் பார்க்கிறானோ, அப்போது எதையும் வெறுப்பதில்லை''

மேற்கூறியவாறு சுவாமிகளுடன் இருநாட்களைக் கழிக்கக் கிடைத்த பேற்றைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன். இச் சந்தர்ப்பத்தைக் கூட்டி வைத்த திருவருளை மனமார, வாயார வாழ்த்தி இக் கட்டுரையை முடிக்கின்றேன்.

# ஈழத்துத் தவப் பெரியார் யோக சுவாமிகள்

(திருமதி. இ. சரஸ்வதி அம்மா அவர்கள்)

சுவாமிகளை முதன் முதல் கேள்விப்பட்டது சுவாமிகளின் வாலிப காலத்தில் செல்லப்பாப் பெரியாரின் பின் தொடர்ந்து திரிந்த அறிஞர்களில் ஒருவர் வாயிலாகவே. இவர் சுவாமிகளை எனக்கு அறிமுகம் செய்த போது 'இலுப்பையடி விசரனை நீங்கள் சென்று தரிசிக்கவில்லையா? என வினவினார். அப்பொழுது நான் அவர் எங்கிருக்கின்றார்? எப்படியான தன்மையுள்ளவர் எனக் கேட்டேன். அப்பெரியார், அவர் சாதாரண மனிதன் போன்றிருப்பார் காவி கமண்டலம் விபூதிப்பை யோகதண்டு என்பனவொன்றும் இருக்காது. வெள்ளிபோன்ற குடுமித்தலை வெண்மையான நீண்டதாடி பொதுநிறவுடல் சுத்தமான வெண்மையான வேட்டி, மேல்துண்டு, வேகமான நடை இவையே அவரிடங் காணப்படும் அடையாளங்கள் எனக்கூறினர். அப்படியானால் சுவாமிகளை ஏன் இலுப்பையடி விசரன் எனக்கூறினீர்கள் என வினவினேன். சுவாமிகளின் ஆச்சிரமத்தடியில் நிற்கும் இலுப்பை மரத்தடியிற்றான் சுவாமிகள் அதிக நேரம் இருப்பது வழக்கம். இதனால் அவருக்கு அப்பெயர் வழங்கலாயிற்றெனவும். சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளின் சிஷ்ய கூட்டத்தை விட்டு அடிக்கடி விலகி தனியிடந்தேடி ஒளித்து கண்மூடித் தியானத்திலாழ்ந்துவிடுவார் சிலருடன் அன்பாகப் பழகுவார், சிலரைக் கோவித்து வைவார். தானே தன்னில் பேசிக்கொண்டேயிருப்பார். இத்தன்மைகளையெல்லாங்கண்டு அவர் மேல் வைத்த அன்பினாலும் மதிப்பினாலும் விசரன் என்ற பெயரால் அழைத்து வந்தோமென்றும் கூறினார். நாங்கள் எத்தனையோபேர் யோக சுவாமிகளுடன் சேர்ந்துசெல்லப்பா பெரியாருடன் பலகாலமாகத்திரிந்தோம். எனினும் சுவாமியவர்களுக்குக்கிடைத்த அநுபவமும் ஆற்றலும் எங்கட்குக்கிட்டவில்லையெனவும் அப் பெரியார் கூறிப் பெருமையடைந்தார்.

இவ்வாக்கியங்களைக் கேட்டதும் சுவாமிகளின் தரிசனம் பெறவேண்டுமென்ற பேராவலுடன் பலநாட்கள் கழிந்தன.

ஒருநாள் நினையாப் பிரகாரமாகயாழ்ப்பாணம் போக வேண்டிய முக்கிய கருமம் இருந்தது. நானும் இன்னுஞ்



சிலருமாக ஒரு வாடகைக் காரில் பிரயாணஞ் செய்தோம். நாவற்குளி புகையிரதஸ்தானச் சந்தி வந்ததும் காருக்குள் இருந்த அம்மையார் ஒருவர், யோகர் சுவாமிகள் வருகின்றார் வண்டியை நிறுத்துங்கள் என்று ஆர்வத்துடன் கூறினார். வண்டி நிறுத்தப்பட்டது எனக்கோ எதிர்பாராத தரிசனை கிடைக்கிறதேயென மனத்தினுள்ளே பொங்கிவரும் மகிழ்ச்சி. என்னுடன் பிரயாணஞ்செய்தவர்களோ சுவாமிகளை முன்னரே தெரிந்து பழகியவர். நாம் எல்லோரும் இறங்கி விழுந்து வணங்கினோம். சுவாமிகள் சாவகச்சேரியில் இருக்கும் தனக்குத் தெரிந்த சில அன்பர்களின் சேமத்தை விசாரித்தார். என் பக்கம் திரும்பினார்; நான் வணங்கினேன். நீயார்? என்ன செய்கின்றாய்? என வினவினார். நான் எனது பெயரைக்கூறி பிள்ளைகளுடன் இருப்பதாகக்கூறினேன். சுவாமிகள் 'அப்பசரி நான் வாறன்' எனக் கூறி நடக்கலானார்.

அவரோ கொழும்புத்துறைக்கும் அரியாலைக்கும் மாறி மாறிச் செல்வது வழக்கமாம். அரியாலையிருந்து யாழ்ப்பாணப்பக்கமே நடந்து வந்தார். நாங்கள் வந்த வண்டியில் வரலாமே சுவாமி என பணிவுடன் வினவினேன். சுவாமிகள் நீங்கள் வந்த கருமத்தைச் சென்று பாருங்கள். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள் என மறுத்துவிட்டு விரைந்தார். எனக்கோ யாழ்ப்பாணம் சென்று இறங்கும் வரை மனத்துள் ஒரே போராட்டம் நிகழத் தொடங்கியது. சுவாமிகள் என்னிடம் வினவிய இருவினாக்களுக்கும் நான் கொடுத்தபதில் சரியா என்பதே. ஏனெனில் என்னை நீயார் என்ற போது. என்னை யார் எனக்குத்தெரியவில்லையே யெனவும் என்ன செய்கின்றாய் என்ற போது என்ன, செய்வதென்று அறியாமல் தவிக்கின்றேன் எனவும் கூறியிருந்தால் சுவாமிகள் எனக்குஎன்னையறியும்வழியையும்கூறிஎன்னசெய்யவேண்டுமெனவும் கூறியிருப்பாரே என ஒருசபலம் தட்டியது. ஆனால் இதுநடந்தோஇன்றைக்கு இருபதாண்டுகளாகின்றன. ஆனால் பெரியார் முன்னிலையில் கூறியபடியே இன்றும் பிள்ளைகளுடன் தான் வசித்து வருகின்றேன். பெரியார்கள் முன் புத்திதத்துவத்தால் கதைக்க முடியாது. உள்ளத்து உள்ளபடியேதான்வரும். கல்வியறிவாலோ அல்லது ஆசைப்பாட்டினாலோ எமக்குள் இருக்கும் பலன்களை அறியாமல் வாசக ஞானம் பேசவும் விரும்பினால் இந்த ஒரு போதும் இந்த ஞானசூரியன் முன்வரவே வராது என்பதைப் பின் உணர்ந்தேன்.

பின் ஒரு முறை இஞ்ஞானசூரியனை சென்றுதரிசித்து அவரின் திருஷ்டியில் எனது துன்பமும் தவிப்பும் தீருமென எனக்குத் தோன்றவே வெள்ளிக்கிழமை சென்று தரிசிப்பதற்காக வியாழக்கிழமை சாயந்தரமே சென்று சுண்டிக்குளியில் ஓர் அன்பர் வீட்டில்தங்கி அதிகாலையில் எழுந்து நடந்து போனேன். சுண்டிக்குளி பெண்கள் பாடசாலையருகாமையில் வந்ததும் எனக்குள் பெரியாரைத் தரிசிக்கப்போகும்போது வெறுங்கையுடன் செல்கின்றேனே ஒரு பூவாவது பழமாவது கொண்டு செல்லவில்லையே வீட்டில் எவ்வளவு நவக்கிரி மாம்பழங்கள் கிடந்தன. ஒரு பழமாவது சுவாமிகட்கு அர்ப்பணிக்கும்பாக்கியம் கிடைக்கவில்லையேயென எண்ணியவாறு கவலையுடன் நடந்தேன்- அந்நாளில் சுவாமிகள் நடக்கமுடியாத நிலையில் இருந்தார்கள்.

நான் சென்று ஆச்சிரம முற்றத்தில் நின்றேன். சுவாமிகளோ அருளொளியை அள்ளி வீசியபடியே அங்கிருந்த அன்பர்கள் நால்வருடன் விவசாயத்தொழில் அபிவிருத்தியைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தார். முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க அன்பரொருவர் பக்கலிலே கண்மூடித் தியானத்திலாழ்ந்திருந்தார். நானோ எல்லாவற்றையும் அவரிடம் ஒப்புக்கொடுத்த நிலையில் நின்றேன். அவர் ஞானதிருஷ்டி என்பக்கமாகத் திரும்பியது. 'நீ என்னுடைய சகோதரிதானே. வந்து இரு' என்றுபணித்தார். நான் விழுந்து வணங்கினேன். அவர் காட்டிய இடத்திலமர்ந்தேன். கருவிகள் ஓய்ந்துவிட்டன. எவ்வளவு நேரம் அப்படியமர்ந்திருந்தேனோ எனக்குத்தெரியாது. கண் விழித்தேன். திரும்பவும் எங்கிருந்து வந்தாய் என்ற மதுர மொழிகேட்டது. 'நான் சாவகச்சேரியில் இருக்கின்றனான்' என்றேன். 'அப்ப உனக்கு கனகசபை, யோகலிங்கம் யோகானந்தம் என்பவர்களைத் தெரியுமா' வெனக் கேட்டார். தெரியுமென்றேன். இப்படிக் கூறிமுடிய சூடத்தை ஏற்றி ஒரு நவக்கிரியில் மாம்பழத்தையும் நந்தியாவர்த்த மலரொன்றையும் எடுத்து இதுவும் சாவகச்சேரியிலிருந்து கொண்டுவந்ததே எனக்கூறி என்னிடந்தந்தார். நான் மிகுந்த நிறைவுடன் மீண்டும் வணங்கிவிட்டுவந்து வீட்டிலிருந்த அத்தனை குழந்தைகட்கும் பிரசாதமாக வழங்கினேன். அவரவர் மன எண்ணங்களையறிந்து அவரவர்க்கிசைய சம்பாஷித்து நாடிவந்ததைக் கொடுத்து அவர்களைத் திருப்பியனுப்பும் அம்மாபெரும் சக்தியையும் தவப்பெரு



மையையும் மற்றவர்களுடன் கலந்துகூறிப் பெருமையடைந்தேன். இது நடந்தகாலத்தில் எத்தனையோ பக்தர்களின் பாவங்களைக்கழுவிப் போக்கிய அத்தூய பாதத்தில் அப்போதும் ஒருகாயம் இருந்து நோவுடன் இருந்தார் அப்பாதத்தை எனக்குத்தூக்கிக்காட்டினார். எனினும் அதைப்பற்றி துன்பமோ கஷ்டமோ பட்டதாக எங்கட்குக் காட்டவில்லை. பெரியார்களின் தன்மையே அதுதானல்லவா? ஏதோ அனுபவிப்பது தேகந்தானே நமக்கென்ன என்று இருந்த நிலையில் ஆனந்தமாய் இருப்பார். அதே சுவாமிகளைத்தான் நான் அன்றும் கண்டேன். அதுமாத்திரமா? சுவாமிகள் வந்தவர்களிடம் எல்லாம் மரவள்ளித்தடியை நல்லாய் நடுங்கள், மரவள்ளிப் பிட்டு உடம்பிற்கு மிகநன்று என உணவு உற்பத்தியைப் பற்றி மிக அவதியாகவும் உறுதியாகவும் கூறிக்கொண்டிருந்தார். நான் இதைக் கேட்டு சுவாமிகட்கு இது என்ன? இப்படியோர் எண்ணம் இதில் ஏதோ விஷயம் பொதிந்திருக்கின்றதென எண்ணினேன். அடுத்த மாதமே அரிசிக் கொன்றோல் அமுல் நடத்தப்பட்டது. சுவாமிகளின் அவதியையும் கரிசனையையும் எண்ணி ஆனந்தக்கண்ணீர் உகுத்தேன்.

இன்னும் ஒரு முறை நானும் ஒரு அம்மையாரும் ஒரு கடையில் நின்று கொண்டிருந்தோம். அந்த அம்மாவுக்கும் சுவாமிகளை முன்னரே தெரியும். சுவாமியவர்களின் கார் அந்தக் கடைக்கு முன்னிலையில் வந்து நின்றது. முந்திரிகைப் பழம் வேண்டும்படி சொன்னார். நாங்கள் இருவரும் சுவாமிகளை உடனே சென்று வணங்கினோம். அங்கு நின்றவர் முந்திரிகைப்பழம் சரியான விலையென்றார். அது சரிவிலையென்றாலும் வேண்டத்தானே வேணும். நான் ஓர் நோயாளியைப் பார்க்கப் போகின்றேன் எனக்கூறி ஒரு ரூபா கரன்சி நோட்டுப்புத்தகம் ஒன்றை எடுத்து ஆறுநோட்டுக்களைக் கொடுத்துவிட்டு பழத்தைப் பெற்றுக்கொண்டு அம்மையாரைத்திரும்பிப்பார்த்து 'கடவுளே நீயோ' என்றார் என்னைப்பார்த்து எங்கே 'போகின்றாய்' என்றும் கேட்டார். அந்த அம்மையார் அவ என்னுடன் வருகின்றார் சுவாமி என்றார். உடனே இருவருங் கூடிக்கொண்டு போங்கள் என்றுங்கூறினார். அத்திருவாக்கின்படியே நாங்கள் இருவரும் இன்றுவரை இருபது வருடங்களாகவே மாறுபடா உள்ளத்தினராய் அன்புடன் பழகி நடத்து வருகின்றோம். சுவாமிகள் சாதாரணமக்கள் போலவே நோயாளி

களைப் பார்வையிடச் சென்றதும் அவர்களுக்கேற்ற உணவு வகைகளைக் கொண்டுபோய்க் கவனிக்கும் கருணையையும் என்னவென்று சொல்வாம். இவற்றை யெல்லாம் சிந்திக்கும்போதெல்லாம் சீவன்முத்தரின் தன்மைகளைப் பெரியார் வாயிலாகவும் புத்தகமூலமாகவும் வாசித்தும் இருந்தேன். இப்போதத்ரூபமாய் அறிகின்றேன் என்ற மகிழ்ச்சியே ஏற்பட்டது. இன்னும் சுவாமிகளின் அரிய வாக்குகளும் ஆசிகளும் அப்படியே நிறைவேறிவிட்டதைக் கூறக்கூறவாயும் உள்ளமும் இனிக்கிறதெனினும் இன்னும் ஒரு நிகழ்ச்சியைக் கூறிவிடுகின்றேன். நான் முன் கூறிய அம்மையாரோ வரலாற்றில் இடம் பெறக்கூடிய கல்வி அறிவு ஒழுக்கம் அன்பு பக்திவைராக்கியம் என்பவற்றால் உருவாக்கப்பட்ட தூய்மையான அம்மையார். அந்த அம்மையார் ஒரு முறை சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றபோது சுவாமிகள் நீ ஒளவையைப் போலிரு எனத்திருவாய் மலர்ந்தனராம். அவ்வாக்கியம் எவ்வளவு தூரம் உண்மையென்று அம்மையாரின் வாழ்க்கை முறையும் அம்மையாரை அறிந்தவர்கட்கும் அவரின் வரலாற்றை அறிந்தவர்க்கும் தான் நன்றாகத் தெரியும். எடுத்துக் கூறவேண்டியதில்லை.

இதுவரை சுவாமிகளை இப்படியாக அவர் நயனதீட்சையையும் ஆசிகளையும் நான் பெற்றேனேயல்லாமல் அவருடன் உளம்விட்டுக்கலந்து அவர் திருவாயினின்றும்ஒரு வாக்கியம் கேட்கவில்லையேயென எனக்குள்ளூர சிறிது சலனமாகவேயிருந்தது. அக்குறையையும் அக்கருணைக்கடல் விட்டு வைக்கவில்லை. எங்கிருந்தாலும் எப்பணியிலீடுபட்டிருந்தாலும் தன் அன்பர்களின் தேவையை அறிந்து அவற்றைமுடித்து வைப்பதில் எங்கள் சுவாமிகளும் பின் நிற்கவில்லை. ஒருநாள் எங்கள் வீட்டு முற்றத்தில் நின்ற பொன்னொச்சி மரம் ஒன்று பூத்துக் குலுங்கிய வண்ணம் இருந்தது. அவ்வழகே ஒரு தனியழகு; அதனடியிலே வெண்மையே உருவெடுத்ததுபோன்ற தூய ஆடை வெள்ளிக் கம்பிகள் போன்ற தாடியும் தலையும் இதனிடையே அருள் ஒளிததும்பும் கண்கள் புன்னகை பொருந்திய முகம் திருவுருவும் இத்தனையும் ஒருங்கே நிறைந்த ஞானக் கடல் நிற்பதைக் கண்டேன். என் கண்களோ என்ன தவம் செய்தன என்ற எண்ணத்துடன் ஓடோடிச் சென்று பாதத்தில்வீழ்ந்தேன், எழுந்தேன், என்னவென்று கூறுவேன், என்னுள்ளம் வெம்பியது. கண்ணீர் மல்கியது, விபூதியை எடுத்தார், என் நெற்றியில் அணிந்தார்.



என் வாயிலும் இட்டார். அது மாத்திரமா? ஓர் மந்திரத்தை எனக்குச் சொன்னார். திரும்பவும் அவர் பாதத்தில் வீழ்ந்தேன்; வணங்கினேன்; அவரின்பாதம் ஒன்று நெருப்புச்சுட்ட புண் அரைவாசி ஆறி இருந்தது போலிருந்தது. அதைப் பார்த்ததும் மிகவும் துன்பப்பட்டேனெனினும் சுவாமிகள் அருளிய பெரும் பேற்றை எண்ணி எண்ணி இறும்பூதியெய்திக்கொண்டேன். ஆனால் திடீரென சுவாமியைக் காணவில்லை. இதனால் அவதிப்பட்டு ஓட எழுந்தேன். அப்போ நான் வீட்டுக்குள் இருப்பதை உணர்ந்தேன். கண்டது கனவென்றும் உணர்ந்தேன். அக்குருநாதர் குழந்தைகளின் தேவையை அறிந்து கொடுக்கும் அன்னையைப் போன்று புறம் புறத்திரிந்து அருள்புரிந்து ஆண்ட அந்த அருளை எண்ணி எண்ணிப் பெருமையடைகின்றேன். பின் ஒரு மாதத்தில் அவர் மாடு முட்டியதால் அதே பாதம் காயப்பட்டதையும் அறிந்தேனெனினும் திரும்ப அவரைச் சென்றுதரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கடைசிவரை கிடைக்கவில்லை. இதற்காகத்தான் குருநாதர் இவ்வளவு அவசியமாக வந்து என்னை ஆண்டாரோ அறியேன்.

அவ்வள்ளல் சமாதியான அன்று இரவு (23.3.64இரவு) எனக்கு உடம்பு மிகச் சுகக்குறைவாகவிருந்தது. நேரம் போகப்போக ஒவ்வொரு நிமிடமும் விழித்த நிலையில் கிடந்து படுக்கையில் உருண்டு கொண்டே கிடந்தேன். பின் என்றுமில்லாதவகையில் என் உடம்பு நொந்து நொந்து ஒவ்வொரு பகுதியுங் கழன்று விடுவது போன்ற உணர்ச்சி இப்படித்தான் சாகிறது ஆக்கும் என்றும் யோசித்தேன். காலையில் எழுந்து கொள்ள முடியவில்லை. ரேடியோச் செய்தியில் படுத்த படுக்கையில் சுவாமிகள் உடலை நீத்தார் என்று அறிந்தேன். பூதவுடல்தான் மறைந்தது. அவர் பொன்மொழிகளும் அருளுரைகளும் ஒவ்வொருவர் உள்ளத்துள் நின்றும் வழி நடத்திக் கொண்டேயிருக்கின்றன.

எங்கள் ஈழநாட்டிலிருந்த சீர்கேட்டைத் தீர்க்கத் தோன்றிய கலைக்களஞ்சியம் யோககுருமணி. ஒரு காலத்தில் தமிழ் படிக்கும் வாய்ப்பு ஒருசிலருக்கு மட்டுந்தான் இருந்தது.

ஆங்கில ஆட்சிக் காலத்தின் கல்வித் திட்டத்தின்படி ஆங்கிலம் பயில விரும்புவோர் மூன்றாம் வகுப்புத் தேறியதும் ஆங்கில வகுப்பில் சேர்ந்துவிட வேண்டும். அப்படியல்ல

வென்று தமிழ் படித்துக்கொண்டு போனால் தொழிற் கல்விக்குள்ளாக விரும்புகிறவர்கட்கு காலம் ஓடிவிடும். அதோடு அக்காலத்தில் அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளும் கத்தோலிக்கமிஷன்பாடசாலைகளுமே ஆங்கிலம் படிக்கக்கூடியநிலையில் முன்னேறி இருந்தன. இந் நிலையில் இந்து மத சம்பந்தமான சமய வளர்சிக்குப் பெரிய நெருக்கடி. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டைப் படித்தும் சமய பாடம் ஒப்புவிக்க விப்பார்கள். எந்தச் சமயத்தில் குழந்தைகள் என்றாலும் புள்ளிகள் கூடத்தான். இதற்காக மறுசமயப் பாடத்தைப் படித்துப் புள்ளி பெற்றவர்களும் தமிழ் பேசினால்குற்றம்போடுவார்களென்று ஆங்கிலத்தைப் பேசிவிட்டு தலைகால் தெரியாது அரசாங்கத்தில் நுழைந்த எம் சகோதர அன்பர்களுக்குச் சுவாமிகளின் ஆங்கில அறிவு எந்த அளவுக்கு தலை அம்மலைப் போக்கித் தெளிவைக் கொடுத்து அவர்களை ஆளாக்கிய அருமருந்தல்லவா? சுவாமிகளின் குழந்தைகள் எவ்வளவுக்கெவ்வளவு தவஞ் செய்த புண்ணிய ஆன்மாக்கள் என்று பெருமைபாராட்டி போற்றக்கூடியதாக இந்த ஞானத் தந்தையைக் கிடைக்கப் பெற்றார்கள் என்றால் ஈழ நாட்டு மக்கள் செய்த தவமே யல்லாது வேறு யாது கூறலாம்.

இந்தத் தவயோகி அவரவர் பிராரத்துவத்துக்கேற்ற கர்மாவைச் செய்ய அவர்களைத் தூண்டிவிடுவார். இவர் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் தூல சூக்ஷ்ம காரண தேக நிலையை அறிந்துவிடுவது வழக்கம். ஒருவர் இருவரல்ல எத்தனையோ சீவன்களுக்கு சமாதானங் கூறிவிடுவார்.

ஒருவரைப்பார்த்து ஒருமுறை சொன்னாராம் ''நீ விவாகம் செய்து கொண்டு தவஞ் செய்'', இன்னும் ஒருவரைப் பார்த்து உனக்கென்ன கலியாணம் என்றாராம். இன்னொருவர் தனது தொழிலை விட்டுப்போட்டுப் பரதேசியாய் சுவாமிகளிடம் போனாராம். சோம்பேறிப்பயலே எங்கே வந்தாயென்று கூறாத வார்த்தைகளைக் கூறித் துரத்தினாராம். இதே நிகழ்ச்சிகளை என்றும் அவர் முன்னிலையில் நாளாந்தம் நாம் காணலாம். புதிதாக ஒருவர் வந்தால் சுவாமிகளைச் சாதாரண நிலையில் மதிப்பிட்டுத்தான் திரும்புவர். ஆனால் அவரின் கண்டிப்புகளும் அவதியும் கதைகளும் மற்றவர்க்கு எவ்வளவு தூரம் சாட்டையடி கொடுத்து, அவர்களை ஈடேற்றியிருக்கும் என்ற ஒரு பேருண்மையை அநுபவ நீதியிற் கண்டவர். இந்நந்நாட்டில் நான்கு பகுதியிலும் மாத்திரமன்று வெளிநாடு



களிலும் கூட உண்டு. இத்திரிகால உணர்ச்சியும் நிறைந்த இம் மகான் யாருடன் என்றாலும் அதைக் காட்டிக் கொண்டதில்லை. சொல்லாமற் சொல்லியும் செய்யாமற் செய்து கருணை வழிநடத்திய எம் பெருமான் செயல்களை எம் அறிவால் அறியுந் தரமன்று. யாராயிருந்தாலும் சரி அன்போடு நம்பி வணங்கும் அன்பர்கள் எவ்வளவு கர்மாநிறைந்தவர்களாயிருந்தாலும் அவர்கட்கு ஆற்றக்கூடிய வழியில் ஒருவழியைச் சொல்லித் தான் அனுப்பிவிடுவார்.

இந்த ஈழம் தந்த பேரொளியிடம் இன்னும் ஒருகருணை. என்னவெனில் இறைவனுடைய திருநாமத்தை எந்தநேரமும் தனது திருநாவில் உச்சரிக்கும் முறை மிகவும் மர்ம மானது. யார் யாருக்கு இறைவனது திருநாமம் இடப் பெற்றிருக்கின்றதோ அந்த நாமங்களைச் சொல்லி ஏதும் ஒரு விசாரணை ஆரம்பிப்பார். கனகசபை, நடராசா, சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை, கந்தையா என்று நாமங்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் அன்பர்கள் மத்தியில் உச்சரித்து எங்களுக்கும் ஞாபகப்படுத்தியபடியே யிருப்பார். இப்படியான தன்மைகள் நிரம்பிய ஒருகருணை வள்ளலைப் பெறக்கிடைத்தது எங்கள் ஈழத்து பேரன்புத்தாகமுள்ள மக்கள் நற்பலனே.

சுவாமிகள் தம் அன்பர்கள் தம்மிடம் நினைத்துவர இருக்கிறார்கள் என்று அறிந்ததும் குழந்தையிடம் ஓடும் அன்னை போன்று ஓடோடி அவர் இல்லங்களுக்குத் தாமே சென்று தரிசனங்கொடுத்து அவர்கள் வேண்டியதற்கு வழிவகுத்து விடுவார். இக் கருத்தையே சிவதொண்டன் முகப்பில், திலதமெனத் திகழ்கின்ற வாக்கியம்.

'எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவாரீசன்' திருவடிப் பேறடைந்த பூரண நிலவு என்றுந்தன் அன்பர் உள்ளத்து ஒளிபரப்பி உலகம் உய்யக் கருணை புரியப் பிரார்த்திக்கின்றேன்.

அக்குருநாதர் ஆற்றலையும் அருளையும் எழுத எழுத இன்னும் விரிந்துகொண்டே போகும். என்னுள்ளமும் இனித்துக்கொண்டே யிருக்கும். இதனால் எனது கட்டுரையை நிறுத்திக் கொள்கிறேன்.

ஓம் தத் சத்
சாந்தி சாந்தி சாந்தி

# மரணமே வருக!

*(பரமஹம்சதாசன்)*

ஒருகணமும் இனிவாழும் தகையில் லென்றிவ்
    வுல கொதுக்கித் தள்ளிவிடும் உயிரை யெல்லாம்
மறுகணமே விரிகரத்தால் அஞ்ச லென்றே
    வாரியணைத் தமைதிநிறை வாழ்வு நல்கும்
அருமரண தேவதையே! பேத மின்றி
    அனைத்துயிர்க்கும் சமதர்மம் நீதி நல்கும்
தருமத்தின் உறைவிடமே! தஞ்சம் உன்தாள்
    த்மியேனை ஆதரிக்க வருக தாயே!

போதுமினிப் புவிவாழ்வு போதும் போதும்!
    புல்லுடலைச் சுமந்ததினிப் போதும் போதும்!
தீதெவர்க்கும் இழைக்காமல் ஒழுக்கம் நேர்மை
    செம்மையுடன் வாழ்ந்திருந்தும் கொடிய வஞ்சப்
பாதகர்க்கும் கிட்டாத கொடிய நோயால்
    பட்டபெருந் துயரமினிப் போதும் போதும்!
மாதுயரச் சேற்றினைவிட் டென்னை மீட்டுன்
    மடியின்மிசை துயிலூட்ட வருக அம்மா!

கண் கெட்டுப் பல்விழுந்து காதும் கெட்டுக்
    கட்டுடலம் வெற்றுடலக் கூடாய் வாடி
பண்பட்ட நண்பர்களும் தொலைவில் வைகப்
    பதங்கெட்ட சுற்றம் உண்டு பார்த்தொ துங்க
கண்கெட்ட வெம்பிணியால் கணமும் நைந்து
    கதியற்றுத் துடிக்குமெனைக் கலங்க விட்டுப்
பண்பற்ற கொடியவர்போல் நீயும் பார்த்துப்
    பார்த் தொதுங்கல் முறையாமோ? வந்த ணைப்பாய்!

# உருத்திர மூர்த்தீ!

பொறுக்கமுடி யாதினிமேல் பொறுக்கமுடி யாது
    பொல்லாத நோய்த்துயரம் பொறுக்கமுடி யாது
உருக்கியஅக் கொடுமையினால் பட்டதுயர் போதும்
    உடற்சுமையை இக்கணமே உவந்தெடுத்துக் கொள்வாய்!



பெருக்கியகண் ணீர்அருவி போதாதா? உன்பால்
    பேதைஇன்னும் எத்தனைநாள் பிரார்த்தனைசெய் தழு
உருத்திரனைச் சுடலையிலே சிவர்களை உய்க்க (வேன்?
    ஓய்வின்றி நர்த்தமிடும் ஒப்பில்நடத் தரசே!

எத்தனைதான் தீவினைகள் செய்துவிட்ட போதும்
    எந்தைநின தடியிணையை இறைஞ்சியழு பவர்க்கு
அத்தனையும் பொடியாக்கி ஆட்கொள்வாய் என்பர்
    அனுபவித்த மெய்யடியார் அவர்மரபில் யானோர்
பித்தேறும் கடைச்சிறியேன் அலனோ?இப் பேதை
    பிதற்றலினால் உனக்கிரக்கம் பிறக்கவினும் இலையோ?
அத்தாநற் சுடலையிலே சிவர்களை உய்க்க
    அனவரதம் நர்த்தமிடும் அருள்நடன மூர்த்தீ!

# *மேலக் கரம்பொன் முருகவேள் துதி!

உமையவள் பாலா உணர்வினுக் கரியாய்
    ஒப்பிலாச் சிவகுரு மணியே
இமையவர்க் கரசே எந்தையே உன்தாள்
    இறைஞ்சிநான் உய்ந்திட விழைந்தேன்
அமிழ்தினும் இனிய தூயயாழ் மேலைக்
    கரம்பொனில் அமர்ந்தருள் விளக்கும்
தமிழர்தம் தெய்வ சக்திவேல் முருகா,
    தஞ்சம்நின் தாள்மலர் போற்றி!

*(மரணப் படுக்கையில் ''கவிஞர் பரமஹம்ஸதாசர்'' அவர்களின் கடைசிப் பாடல்கள். * ஆகக் கடைசிப்பாடல்.*

---

### இன்பம்

*எங்கும் ஈசனைக் காணுதல் இன்பமே*
*ஏதிலார் பால் இரங்குதல் இன்பமே*
*பொங்கு கோபத்தைப் போக்குதல் இன்பமே*
*புவியின் ஆசையை நீக்குதல் இன்பமே*
*தங்கும் யோகத் தமருதல் இன்பமே*
*தானே தானுய்த் தழைத்திடல் இன்பமே*
*இங்கெ னக்கின்பம் எளிதில் விளக்கிய*
*என்குரு பர புங்கவ சிங்கமே!* —**யோகர் சுவாமிகள்**

# தனி முதல்

(சுவாமி இராஜேஸ்வரானந்தர்)

தனிமுதல் அனுபூதி அதீத உன்னத நிலை. தனிமுதல், மனதையும் நுண்ணறிவையும் மேம்படுகிறது. அது முடிவுள்ளதும் தொடர்புள்ளதும் அன்று.

அகண்ட வஸ்து மனதுக் கெட்டாமை நிரீச்சுரவாதத்திற்குச் செலுத்தும் இழிவான கருத்தில் அறியொண்ணுமை வாதம் அன்று. தனிமுதல் உண்மையாக அனுபூதியடையத் தக்கது. அவ் வகையான அனுபூதி மனித வாழ்வில் உயர்வு நலம். அது மிக நேரான, மிக உள்ளான மிகத் தெளிவான அருட்டெரிப்பு.

தனிமுதல் சிந்திக்க வொண்ணுதது (அதர்க்யம்), மனதுக் கெட்டாதது (அப்ரமேயம்), மெய்யறிவு சொரூபம், (ஞானம்), அனைவரினதும் இருதயத்தில் அறியத்தக்கதும் ஆழ்ந்து நிலைகொண்டதும் (ஞானகம்யம் ஹ்ரிதி சர்வஸ்ய திஸ்திதம்) என்று உபநிஷதங்கள் பகர்கின்றன.

தனிமுதல் அறிய முடியாதது போற் ருேன்றுகிறது. ஏனெனில் வரையறையுள்ள நுண்ணறிவு தொடர்புடையவற்றை மட்டும் எடுத்தாண்டு அப்பாலுள்ள அகண்ட தனிமுதலுக்குக் கருத்துச் செலுத்தப்பட்டபோது தன் தகுதியின்மையைக் கண்டுணர்கிறது.

சமயசாரம் தனி முதலின் அதீத மகத்துவத்தை அங்கீகரிக்கிறது. ஆனுல் நிரீச்சுர நோக்கைச் சமய உணர்ச்சி நிலையில் முக்கியமானதாய் அல்லது பொது அம்சமாய்த் தெரிவிக்கவில்லை அல்லது பறை சாற்றவில்லை.

எல்லா வரம்புகளையும் வரம்புக் குட்பட்டவற்றையும் தொடர்பான ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொரு விபரத்தையும் மேம்படும் தெய்வத்தைப் பற்றி அப்படிப்பட்ட அடிப்படையான சமயவுணர்வுநிலை அறிய முடியாதது ஆக நிச்சயிக்கப்பட வேண்டுமென்றும் விஞ்ஞானம் அறியத்தக்கது ஆகநிச்சயிக்கப்படவேண்டுமென்றும் அதுபொருள்படவில்லை.



இவ்விதமாக சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கு மிடையில் பொருத்தம் உண்டாகும்படி செய்தல் ஒரு வெளிப்படையான இசைவின்மை. இம் முறையாகத் தனிமுதலை நினைக்கவும் கூடாததாகச் செய்வது சமயத்தை மொத்தத்தில் அகற்றுவதே.

எவன், தான் அதை அறிவதாய் எண்ணுகிருனே உண்மையாகஅதை அவன் அறிகிருனில்லை. எவன்தான் அதைஅறியவில்லையென்றுஎண்ணுகிருனே அவன் அதைஅறிகிருன். யார் அதை முற்ருக அறியப்படுவதாய் எண்ணுகிருர்களோ அது அவர்களுக்கு அகப்படாதிருக்கிறது. யார் அதை அறிந்து கொள்ள முடியாததாய் அறிகிருர்களோ அவர்களது காட்சிக்குள் அது உளது'' என்று உபநிஷதங்கள் உறுதி கூறுகின்றன.

சமயம் மெய்ப் பொருளை நோக்கி ஓர் உளப்பாங்கு; அது ஒவ்வொரு தனியாளின் இருதயத்திலும் வாழ்விலும் ஒரு குன்ருச் செல்வாக்கை நிறுத்துகிறது. ஓர் உயிருள்ள மரத்தின் ரசம் மிகு தொலைவிலிருக்கும் கிளைகளை ஊடுருவிச் செல்வது போன்று அது தன் செல்வாக்கை ஒருவரின் நடத்தையின் ஒவ்வொரு பகுதியிலும் வெளியிடுகிறது. தனிமுதலையும் சமயத்தை (ஆன்ம–அனுபூதியை) யும் அகற்றுக. அப்போது மனிதன் நோக்கமின்றி வாழ்கிருன்.

---

## குருபதத்தைக் கும்பிடுவோம்

காலை யெழுந்திருந்து
கைகால் முகங்கழுவி
கோல மலரெடுத்துக் – கிளியே
குருபதத்தைக் கும்பிடுவோம்
கோபங்காம மோகமாகிய
கூடாத கூட்டங் கூடாதே
நாடாதே யென்றுந் தேடாதே
நாமது வெடி நாமது வெடி.

—யோகர் சுவாமிகள்.

# உலக சமயங்கள் மூலம் உலக ஒற்றுமை

( சுவாமி சிவானந்தர் )

உலகில் மிகச்சிறந்த மூலக்கூறும் பொதுவாக ஒன்றாக இணைக்கும் சக்தியுமாக மெய்ச்சமயத்திற்கு ஐக்கியநாடுகள் அதியூக்கமான கருத்துச் செலுத்துவதற்குத் தற்போது தருணமாயிருக்கிறது. சமயம் ஒவ்வொரு மனிதனிலும் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் நிறைவுக்கும் வெல்லமுடியாத தூண்டுகை. அது கடவுள் அல்லது உண்மை உண்டென்றும் மிகவுயர் கருத்தை அனுபவபூர்வமாக அறிவதற்கு ஆர்வம். இச்சமயத் தூண்டுகை மனித இனம் அனைத்தையும் ஒன்றேயாயும் ஒற்றுமையுடையதாயும் செய்கிறது.

உலக சமயங்கள் அனைத்தும் ஒரே நிலையான திவ்விய இலக்கைச் சுட்டிக்காட்டுகின்றன. எல்லாச் சமயங்களும் ஒரேமாதிரியான இலட்சியங்களை அதாவது உயிர், இரக்கம், மன்பதை சேவை, இழிவான சித்தவிவகாரங்களையும் மிருக இயல்லையும் வசமாக்கல், நிறைவு நாட்டம் அமைதியினதும் ஒருமையினதும் தேட்டம் என்பவற்றை எம்முன் நிறுவுகின்றன. அவை சகிப்பு. மன்னிப்பு, தீங்கு செய்யாமை, கருணை, தர்மசிந்தை திவ்விய பேறுகள் ஆதியன பொருந்திய வாழ்வை மனிதனுக்குப் புகட்டுகின்றன.

மூலாதாரமாக எல்லாச்சமயங்களுக்கும் எல்லாச் சமயக் கோட்பாடுகளுக்கும் எலலாச் சமயக் கருத்துக்களுக்குமிடையில் தனியொற்றுமை நிலைத்திருக்கிறது. ஒரேகருத்துடன் அவையனைத்தும் திவ்வியவஸ்துவின் அகண்டித இருப்பின் அனுபவ அறிவுக்குத் தூண்டுகின்றன. சேவி, நேசி, கொடு, புனிதமாக்கு, தியானி, அனுபூதியடை, என்று அவை ஒருமித்தபடி பறைசாற்றுகின்றன.

அபு–பென் ஆதாமைப் பற்றிய அழகிய வாழ்க்கைத் துணுக்கும், ராந்தி தேவரின் உணர்ச்சி எழுப்பும் சரிதையும் கிறித்துவமத நூலிற்காணப்படும் நல்வழிப் போக்கனின் வரலாறும்பிம்பிசாரராஜனின்யாகத்தில் கௌதம புத்தரை பற்றி விழுமிய வர்ணனையும் – எல்லாம்மெய்ச்சமய உணர்வு நிலையின் பொதுஇயல்பை மிக அழகாகவும் பயன் விளையத் தக்கதாகவும் வெளிப்படுத்த உதவுகின்றன.

சமய உணர்வு மனிதஇனம் அனைத்தையும் ஆன்மிக ஒருமையின் அன்புள்ள அணைப்பிற்றழுவுகிறது. அவ்வகையான ஒன்றாக்குதல் மட்டுமே முக்கியமானதாயும் பயன்படத்தக்கதாயும் நிலைத்திருக்கிறதாயும் இருக்க இயலும். பொருளாதார அல்லது சமுக அல்லது அரசியல் அடிப்படையில் நிறுவிய ஏதேனுமோர் ஒற்றுமை அல்லது ஒருமை நிலைத்திருக்காது. விழிப்பூட்டிய சமய உணர்வு துணைகொண்டு யாம் ஒரு மனிதனை மற்றொரு மனிதனுடன் அடிப்படை நிலையில் இணைக்கிறோம். ஒவ்வொரு மனிதனிலுள்ள பொதுச் சமய உணர்வு மூலம் சமயம் நோக்கப் ட்டு ஓர்ந்தறியப்பட்டபோது கிறிஸ்தவர், முகம்மதியர், இந்துக்கள் பௌத்தர், ஜைனர், பாரசீகர் தன்மையே ஏதேனுமொரு குறிப்பிட்ட சமயிகளாக உணராது முழு இசைவிணக்கத்துடன் நிறைவுக்கும் மகிழ்ச்சிக்கும் செலுத்தும் நெறியில் ஒருமித்து முன்னேறும் சகோதர ஆன்மாக்களாக உணர்வார்கள்.

எல்லாச் சமயங்களும் ஒருமையுணர்வையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கும்படியும் ஒழுக்கப்பயிற்சி, தியாகம் சேவையென்பவற்றால் தெய்வீகத்தன்மை யுள்ளவர்களாகும் படியும் மனிதனுக்குப் போதிக்கின்றன. அழியுமியல்புள்ள இவ்வுலகப் பொருட்களின் மருட்சிக்கும் பகட்டுக்கும் மயங்கவேண்டாமென்றும் கடவுட் காட்சிப் பேறாகிய வாழ்வின் உண்மையடைவை மறக்க வேண்டா மென்றும் அவை மனிதனுக்குப் புகட்டுகின்றன. ஆகையால் சமயமே சமூக ஆதாரபீடம். எல்லா நன்மையினதும் உவகையினதும்; பிறப்பிடம் தனியாளினதும் தனியாள் மூலம் நாட்டினதும் நாட்டின்மூலம் முழுவுலகினதும் அறம், நிறைவு ஐசுவரியம் முதலியனவற்றின் மூலாதாரம்.

'ஈசாவாஸ்யம் இதம் சர்வம்' இது அனைத்தும் பரத்தால் வியாபிக்கப்பட்டுள்ளது. என்றும் மகிமை வாய்ந்த உபநிடத உறுதி மொழியை நீங்கள் அனைவரும் மனதிற் கொள்க. ஏகோ தேவா'சர்வ பூதேஸு குத சாக்ஷி சேத கேவலோ நிர்க்குணச்ச— ஒரே பரம்பொருளே உயிர்ப்பிராணிகள் அனைத்திலும் மறைந்திருக்கிறது; அதுவே என்னும் புனிதமான அத்துவித வஸ்துவாகிய நித்திய அகச் சாட்சியும் ஊக்கம் ஊட்டுவதும், உலகஅரசாங்கங்கள் அணுவாயுதங்கள் உற்பத்தி செய்யும் கொடூரத் தொழிலை கைவிடுவார்களாக. மேலும் உலகச் சமயங்களால் வசனிக்கப்பட்ட அன்புவிதியும் ஆன்மிக ஒருமைக் கருத்தும்நாடுகளுக்கும் மக்களினங்களுக்குமிடையில் பரவி நிலவுவதாக.

'ATHMAJOTHI' Registered at the G.P.O. as a Newspaper. M.L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

17ஆவது ஆண்டு 5வது சோதி இன்று உங்கள்கையில் கிடைக்கின்றது. சந்தா நேயர்களின் உதவியினாலேயே சோதி பதினாறு ஆண்டுகளைக் கடந்துள்ளது. சோதிக் குழந்தை உங்கள் வீட்டைத் தேடிவரும்போது என்ன பரிசு அளிக்கப் போகின்றீர்கள். உங்கள் சந்தாவை உடனே அனுப்பி வைத்தல்தான் நீங்கள் கொடுக்கும் பரிசாகும். என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக.

இந்தியாவிலுள்ள சந்தாநேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ்,
அரிசிப்பாளையம், சேலம்—9.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைப்பதோடு இவ்விடமும் அறியத் தருவீர்களாக.

## ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி. (சிலோன்)

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| 1. | ஆத்மஜோதி மலர் (1963) | 2.00 |
| 2. | சைவஇலக்கியக் கதா மஞ்சரி | 3.00 |
| 3. | ஆத்மநாதம் | 3.00 |
| 4. | திங்கனிச் சோலை | 2.50 |
| 5. | பாட்டாளிபாட்டு | 1.50 |
| 6. | திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழா மலர் | 1.25 |
| 7. | கூட்டு வழிபாடு | .30 |
| 8. | நவராத்திரிப் பாடல் | .30 |
| 9. | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 10. | கதிர்காமப் பதிகம் | .25 |
| 11. | செல்லச்சந்நிதி பாடல் | .15 |
| 12. | கந்தரனுபூதி | .25 |
| 13. | அறிவுரைக் கதைகள் | .65 |
| 14. | நித்திய கருமவிதி | .25 |
| 15. | கதிரைமணிமாலை | .50 |

தபாற் செலவு தனி

அச்சிடுவோர்:- ஆத்மஜோதி அச்சகத்தினர்
அச்சிடுவிப்போர்:- ஆத்மஜோதி நிலையத்தினர்
வெளியிட்டதேதி:- 14-3-65.